DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM

Calender

Miscellaneous Case No CC 139/17

Priliminary Register

Sessions

Prosecution PW 2

Deposition of witness for Defence

Court

Name Muppuram

Father's Name

Village

Taluk

Caste

Calling

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20

30.05.2019 முதல் விசாரணை:

நான் தனக்கன்குளத்தில் குடியிருந்து வருகிறேன். இதற்கு முன்னர் கீழக்குயில்குடி கிராமத்தில் வசித்து வந்தேன். அ.சா1. எனக்கு அத்தை முறையாவார். சிறு வயதிலிருந்தே எனக்கு அவரை தெரியும். கச்சம்மாளின் தாயார் கருப்பாயி என்பவர் பெயரில் பட்டா உள்ளது. பட்டா எண். 55 சர்வே எண். 163/23 செண்ட் நிலத்தை விற்க வேண்டும் என்று சுமார் 5 வருடத்திற்கு முன்பு என்னிடம் சொன்னார். அவர் சொன்ன 2 நாட்கள் கழித்து தனக்கன்குளம் கிராமத்தில் இருந்த அந்த இடத்தை சென்று நான் பார்த்தேன். நானும் கச்சம்மாளும் போய்ப்பார்த்தோம். அளவு சரியாக இருந்தது. சரியான அளவினை தெரிவதற்காக தனக்கன்குளம் விஏஓ அலுவலகத்திற்கு நானும் கச்சம்மாளும் சென்று பார்த்தோம். மேற்படி நிலத்தின் ஆவணங்களை எடுத்து பார்த்தோம். மேற்படி நிலம்

காட்டுராஜா மனைவி சரஸ்வதி என்பவர் பெயரில் இருந்தது. மேற்படி நிலம் எப்படி பட்டா மாறியது என்று விஏஓ அலுவலகத்தில் கேட்டோம் நாங்கள் யாருக்கும் விற்கவில்லை என்று கச்சம்மாள் சொன்னார். மேற்படி நிலத்திற்கான வில்லங்கம் போட்டு பார்த்தோம். மேற்படி நிலத்தினை 1983ம் வரும் 7 ம் மாதம் 149 என்ற ஆவண எண்ணில் சரஸ்வதி அம்மாள் என்பவர் பெயருக்கு பொன்னுச்சாமி என்பவர் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார். அதே வருடம் கருப்பாயிஅம்மாள் என்பவர் பெயரில் உள்ள 163/2 சர்வே எண்ணில் உள்ள 23 செண்ட் நிலத்தினை பிழை திருத்த ஆவணம் பதிவு செய்து பொன்னுச்சாமி சரஸ்வதி அம்மாளுக்கு கொடுத்துள்ளார். பின்னர் இது சம்பந்தமாக விஏஓ அலுவலரிடம் கேட்டோம். நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுமாறு சொன்னார். மேற்படி இடத்தினை சரஸ்வதி அம்மாள் பிளாட்டுகளாக பிரித்து விற்றுள்ளார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

புகார்தாரர் கச்சம்மாள் எனக்கு அத்தை. அவரின் தாயார் பெயர் கருப்பாயி அம்மாள். கருப்பாயி அம்மாளுக்கு எத்தனை குழந்தைகள் என்று எனக்கு தெரியாது என்றால் தெரியும் இரண்டு குழந்தைகள். அந்த இரண்டு குழந்தைகளில் ஒருவர் இறந்து விட்டார். கச்சம்மாள் மட்டும் உயிரோடு உள்ளார். இறந்தவர் பெயர் சீனியம்மாள். அவருக்கு இரண்டு குழந்தைகள் உள்ளார்கள். சீனியம்மாளின் இரண்டு குழந்தைகளில் ஒரு வர் இறந்து விட்டார். ஒருவர் தனக்கன்குளம் கிராமத்தில் வசித்து வருகிறார். கருப்பாயி அம்மாள் கணவர் எப்போது இறந்தார் என்று எனக்குதெரியாது. கருப்பாயி அம்மாள் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. 5 வருடம் முன்பு நிலத்தை விற்க பார்கும் போது மாயக்காள் பெயரில் பட்டா உள்ளதா என்று பார்த்தேனா என்றால் கருப்பாயி பெயரில் உள்ளதாக தெரிந்து கொண்டேன். கருப்பாயி அம்மாள் பெயரில் உள்ள பட்டாவை போலிசார் விசாரணையின் போது கொடுத்துள்ளோம். கருப்பாயி அம்மாள் அந்த நிலத்தை அனுபவித்து வருகிறார் என்பதற்கு வரி ரசீது எதுவும் பார்த்தேனா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் மாயக்காள் புகார் கொடுப்பதற்கு நான் தான் உதவி செய்தேன் என்றால் சரிதான். புகார் கொடுக்கும் போது வழக்கு சம்பந்தமான ஆவணங்கள் அனைத்தும் சான்றிட்ட நகல் பெற்று அதன் பிறகு போலிசாரிடம் கொடுத்தோம். வழக்கு சம்பந்தமாக மதுரை மாவட்ட குற்றப்பிரிவில் புகார் கொடுத்து அதன் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டது

என்றால் விசாரணை நடந்தது. அங்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை ஆஸ்டின்பட்டி காவல் நிலையத்திலற்கு அனுப்பி விட்டனர். மாவட்ட குற்ற பிரிவு விசாரணையில் பொன்னுச்சாமி கலந்து கொண்டார் என்றால் இல்லை. வழக்கு பதிவு செய்வதற்கு முன்பு ஆஸ்டின்பட்டி காவல் நிலையத்தில் எந்த விசாரணையும் நடைபெறவில்லை. மாவட்ட குற்றப்பிரிவிலும் ஆஸ்டின்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்த சமயத்தில் பொன்னுச்சாமி நாடார் என்ன தொழில் செய்து வந்தார் என்றும் எங்கு குடியிருந்து வந்தார் என்றும் எனக்கு தெரியாது. 4 பேர் மீது புகார் கொடுக்கப்பட்டது. சரஸ்வதி, காட்டுராஜா, அவர்களது மகன் உலகராஜா ஆகியோர் மீது புகார் கொடுக்கப்பட்டது. இந்த வழக்கு தற்போது இரண்டு நபர்கள் மீது நிலுவையில் இருந்து வருகிறது. உலகுராஜா என்பவர் ஒரு அரசியல் கட்சியில் முக்கிய பொறுப்பில் இருந்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உலகுராஜா எவ்வாறு இந்த வழக்கிலிருந்து நீக்கப்பட்டார் என்ற விபரம் தெரிந்த கொண்டேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, இந்த வழக்கு நிலுவையில் இருந்து வரும் சமயத்திலும் கச்சம்மாள் என்ற மாயக்காளுக்கு உதவியாக இருந்து வருகிறேன் என்றால் நானும் என் நண்பர் மகாலிங்கமும் உதவியாக இருந்து வருகிறோம். சரஸ்வதி என்பவர் பெயரில் உள்ள பத்திரத்தை ரத்து செய்ய ஏதேனும் நடவடிக்கை மேற்கொண்டோமா என்றால் இல்லை. இது சம்பந்தமாக உரிமையியல் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. டிஆர்ஓ அலுவலகத்தில் பட்டா மாற்றம் கேட்டு மனு தாக்கல் செய்துள்ளோம். டிஆர்ஓ விசாரணை நிலுவையில் இருந்து வருகிறது. டிஆர்ஓ விசாரணையில் சரஸ்வதி, காட்டுராஜா ஆஜராக வில்லை. சரஸ்வதிக்கு பத்திரம் எழுதிக்கொடுத்த பொன்னுச்சாமி நாடார் ஆஜரானாரா என்றால் இல்லை. பொன்னுச்சாமி நாடார் உயிரோடு உள்ளாரா என்ற விபரம் தெரியுமா என்றால் இறந்ததாக ஸ்டேசனில் சொன்னார்கள். மாவட்ட குற்றப்பிரிவில் சொன்னார்கள். நான் கூலிவேலைக்கு சென்று வருகிறேன். கறி வியாபாரம் செய்து வருகிறேன். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன் என்றால் யாரேனும் தேடி வந்து விற்றுக்கொடுக்கக்கேட்டால் விற்றுக் கொடுப்பேன். 5 வருடம் முன்பு இடத்தைச் சென்று பார்த்த போது ஸ்தலத்தில் 23 செண்ட் இருந்தது. 23 செண்ட் நிலம் பல பிளாட்டுகளாக பிரிக்கப்பட்டு விற்கப்பட்டு வீடுகள் கட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிளாட்டுகளாக உள்ளது. நான் போய்இடத்தை பார்த்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல.

சரஸ்வதியம்மாளுக்கு செய்யப்பட்ட கிரையம் மற்றும் பிழைதிருத்த பத்திரம் இரண்டையும் யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. அவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்படவிலலை. அந்த இரண்டு பத்திரங்களிலும் சாட்சிகளாக யார் கையெழுத:து செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. கருப்பாயி அம்மாளுக்கு அந்த சொத்து எப்படி பாத்தியம் என்று தெரிந்து கொண்டேனா என்றால் அவர்களுக்கு பூர்வீகப் பாத்தியப்பட்டது. கருப்பாயி அம்மாள் பெயரில் இருந்த பட்டா தவிர வேறு ஆவணங்கள் எதுவும் பார்க்கவில்லை என்றால் சரிதான். கருப்புபாயி அம்மாள் பெயரில் இருந்த பட்டா கச்சம்மாள் என்ற மாயக்காள் பெயரில் மாறியுள்ளதா என்ற விபரம் தெரியாது என்றால் கச்சம்மாள் என்ற மாயக்காள் பெயரில் மாறவில்லை கருப்பாயி அம்மாள் பெயரில் தான் உள்ளது. பிரச்சனைக்குரிய சொத்து கருப்பாயி அம்மாளுக்கோ அல்லது கச்சம்மாள் என்ற மாயக்காளுக்கோ சொந்தமானது இல்லை என்றால் சரியல்ல. வழக்கில் என்னால் கொடுக்கப்பட்ட ஆவணங்களுக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. ஆவணங்களுக்கும் கச்சம்மாள் என்ற மாயக்காளுக்கும் சம்பந்தமிலலை என்றால் சரியல்ல. கச்சம்மாள் என்ற மாயக்காளுக்கு இரண்டு பெண் குழந்தைகள் இரண்டு ஆண் குழந்தைகள். அவர்கள் உயிருடன் உள்ளனர். தனக்கன்குளத்தில் தான் இருந்து வருகின்றனர். வழக்கின் எதிரி சரஸ்வதி, காட்டுராஜா ஆகியோரிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்க தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதால் இடத்தை எப்படியாவது அபகரித்து விற்று லாபம் அடையும் நேர்ககத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றல் சரியல்ல. அ.சா1. கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.